**அ.வ.எண்.167/2023**

**வா.சா.1 : செந்தில்ஸ்ரீனிவாசன்**

**நாள் : 21.01.2026**

**I.A.No.05/2026 என்ற மனுவில் 21.01.2026 அன்று பிறந்த உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 04.12.1940 ஆம் தேதிய வாதியின் தாத்தா சுப்ரமணிய செட்டியார் மற்றும் மற்றவர்களுக்கிடையே ஏற்பட்ட பாகக்றார் பத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் பக்கத்தில் 17 முதல் 20 வரிகளில் பின்வருமாறு "நம்மில் 1 இலக்கமிட்டவர் தகப்பனார் பெயரிலும், 2 இலக்கமிட்டவர் தகப்பனார் பெயரிலும் நம்மில் 4 இலக்கமிட்டவர் பேரிலும் கிரையம் பெறப்பட்டும் நாம் இதுவரையில் பொதுவாக அனுபவித்து" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் பக்கத்தில் 15வது வரியில் "நமக்கு பிதுராஜியதமாக பாத்தியப்பட்டது" என்ற வாசகத்தை மட்டும் உங்களுக்கு சாதமாக எடுத்துக்கொண்டு மொத்த சொத்தையும் பிதுராஜிய சொத்து

என்ற நீங்கள் குறிப்பிடுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்திற்கு எதிராக நீங்கள் சாட்சியம் அளிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.21 18:06:07 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.